பக்கங்கள் 12
விலை – ரூ.50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் :40
கதிர் : 34

திங்கட்கிழமை
30 டிசெம்பர் 2024

மார்கழி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

தேங்காய்த் தட்டுப்பாடு நீடிக்கும் 06

இந்தியாவிடம் இலவச விசா 05

## கிளிநொச்சி நீர்வழங்கல்

# முறையற்ற திட்டமிடல்களால் அரசுக்கு ரூ.599 மில். இழப்பு

கொழும்பு, டிசெம்பர் 30

கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தில் உள்ள தவறான திட்டமிடல்கள் மற்றும் தாம தங்கள் காரணமாக அரசுக்கு 599 மில்லி யன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. அத்துடன், முழங்காவில் நீர் வழங்கல் திட்டத்திலும் அரசுக்கு 267 மில்லியன் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. 11

## வடக்கில் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமாகாணத்தில் இன்று மழையுடனான காலநிலை நீடிக்கும் என்று இலங்கை வளி 11

## முப்படைகளையும் சீரமைக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் முப்படைகளையும் சீர மைப்பதற்கு அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது என்று பாதுகாப்புச் செயலர் ஓய்வுபெற்ற எயர்வைஸ்மார்ஷல் சம்பத் துயகோந்தா 11

## அரச அதிகாரிகளில் சிலர் மாற்றத்தை விரும்பவில்லை

*அமைச்சர் ஹந்துன்நெத்தி காட்டம்*



கொழும்பு, டிசெ. 30

கடந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பல தீர்மானங்களை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறான மாற் றங்களை நாம் செய்கின்றபோது, அரச அதிகாரிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற னர். மக்கள் கோரும் மாற் றத்தை நடை முறைப்படுத்தா தோரை மாற்றி 11

ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தியதால்

## மினிபஸ் உரிமையாளரின் அனுமதிப்பத்திரம் ரத்து!

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித்தடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாரத்திய நடைமு றைகளை மீறி பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்ப டுத்தும் வகையில் பயணித்த தனியார் பேருந்து உரிமையாளரின் பயணிகள் 11

## ஈழத்தின் மூத்த எழுத்தாளர் யோகேந்திரநாதன் மறைவு!



யாழ்ப்பாணம், டிசெ. 30

ஈழத்தின் மூத்த படைப்பி லக்கியவாதியும், ஊடகவி யலாளருமானநா.யோகேந் திரநாதன் (வயது- 80) நேற்றுக் காலமானார். யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் 11

## 60 மருந்தகங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து

கொழும்பு, டிசெ. 30

கடந்த ஐந்து மாதங்களில் 60 மருந்து விற்பனை நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார 11




அரசாங்கமே
அதிகாரியளுக்கு இவ்வளவு
பயப்பிட்டால்
அப்பாவிச்சனங்கள்
எவ்வளவு பயப்பிடுவினம்?



## விமான விபத்தில் 179 பேர் பலி!

தென்கொரியாவில் துயரம்

## தமிழர்களின் உரிமைகளை அரசு பாதுகாக்க வேண்டும்

அரசியலமைப்புத் தொடர்பில் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் உருவாக்கப் படவுள்ள புதிய அரசமைப்பு, தமிழ் மக்களின் உரி மைகளைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் புதிய அரசியலமைப்பின் ஊடாக 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசாங்கத்தில் மனிதக்கடத்தல்?

## சிங்கள ஊடகம் செய்தி

கொழும்பு, டிசெ. 30

**முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வளாகம் மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள தொழிலாளர் அமைச்சுக்குச் சொந்தமான கட்டடம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மனிதக்கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முறைகேடு விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் திசர ஹிரோஷன நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், இதனை மேற்கோள் காட்டியே குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

மனுஷ நாணயக்காரவுக்கு நெருங்கிய மேலும் சில தரப்பிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி மனுஷ நாணயக்காரவின் இணைப்புச் செயலாளராக இருந்த பாக்ய காரியவசம் என்ற நபரை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபர், இஸ்ரேல் தொழில் மற்றும் தென்கொரிய வேலைகளை பெற்று தருவதாக கூறி சட்டவிரோதமாக பணம் சம்பாதித்துள்ளார்.

அதேவேளை இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்ட பலர் தற்போது காணாமல் போயுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக இருந்த தேசப்பிரிய லியனகே என்பவரும் இந்த மனிதக் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் என குறித்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



# விடுதலைப்புலிகளால் பொருளாதார வீழ்ச்சி

## அதனாலேயே போர் நிறுத்த ஒப்பந்தம் ரணில் விளக்கம்

கொழும்பு, டிசெ. 30

2001 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமைப்புடன் போர் நிறுத்த உடன்படிக்கையை மேற்கொள்ள நேர்ந்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாயிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 7வது அடல் பிஹாரி வாஜ்பாய் விரிவுரையில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2001 டிசெம்பரில் நான் இரண்டாவது முறையாக பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இலங்கை கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டது. இலங்கை இராணுவம் பின்வாங்கவேண்டியிருந்தது. புலிகளின் தாக்குதலால் பல இடங்களில் அதிகாரம் இழந்தது. துறைமுகங்கள் மீதான தாக்குதல்களால் விமான நிலையங்கள், சரக்குகள் மற்றும் விமானங்கள் இலங்கைக்கு வருதல் ஆகியவை பொருளாதாரத்தை முடக்குவதன் காரணத்தால் விடுதலை புலிகளுடன் போர் நிறுத்தம் செய்ய எங்களுக்கு நேரிட்டது - என்றார். (ச-இ)

# ஐ. ம.சக்தியின் விசேட கூட்டம்

கொழும்பு, டிசெ. 30

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

புத்தாண்டுக்குரிய அரசியல் செயற்பாடுகள், உள்ளூராட்சிசபைத் தேர்தல், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், சில முக்கியமான முடிவுகளை எடுப்பதற்காகவுமே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சந்திப்பு முடிந்த பின்னர் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுடன் சஜித் பிரேமதாஸ பேச்சு நடத்தவுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ச- 25, 44)

# தூதுவர்கள் நியமனம் தாமதத்தால் நெருக்கடி

கொழும்பு, டிசெ. 30

பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதரகங்களில் தூதுவர்கள் நியமிக்கப்படாமல் வெற்றிடமாக உள்ளதால் தூதரக நடவடிக்கையில் தடங்கல்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிரந்தர தூதுக்குழு, பிரித்தானியா, இந்தியா, ஆவுஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பிரேசில் உள்ளிட்ட 20 நாடுகளின் தூதுவர்கள் நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அந்த நாடுகளுக்கான தூதுவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


# மொட்டுக்கட்சி மறுசீரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

எதிர்வரும் 2025ஆம் ஆண்டில் விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பலப்படுத்தவுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியை புதிய பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், கட்சியை தனிப் பிரதான கட்சியாக எதிர்கொள்ளும் வகையில் வலுப்படுத்துவதற்கும் அடிமட்ட மற்றும் கிராம மட்டத்தில் உள்ள உறுப்பினர்களைத் தெளிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# அரச நிறுவனங்களிடையே டிஜிற்றலில் பணப்பரிமாற்றம்




கொழும்பு, டிசெ. 30

அரசாங்க நிறுவனங்களுக்கு இடையில் பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள சிறப்பு டிஜிற்றல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்க சிறப்பு திற்றம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் டிஜிற்றல் மயப்படுத்தப்பட உள்ளன. அதற்காக 'GovPay' எனப்படும் சிறப்பு டிஜிற்றல் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டிஜிற்றல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் குறித்த திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது - என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# ரொஹிங்ய அகதிகளை பார்வையிட அனுமதிக்குக

## ம.உ. ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 30

நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியான்மர் அகதிகளைச் சந்திக்க அனுமதி வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி எல். டி.பி.தெஹிதெனிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் எழுத்து மூலம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மியான்மரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்குச் சென்றிருந்தனர்.

குடிவரவு கட்டுப்பாட்டு நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளை பார்வையிட அனுமதி வழங்க முடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முகாமில் உள்ள அகதிகளில் 40இற்கும் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் . எனவே, ஆணைக்குழுவின் அதிகாரிகள் தடையின்றி உரிய புகலிட கோரிக்கையாளர்களை சந்திப்பதற்கு உத்தரவுகளை பிறப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எம்.பி.க்கள் சொத்துவிவரம் பெப்.15 வரை காலக்கெடு

**கொழும்பு, டிசெ. 30**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகம் எழுத்துமூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.**

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வருடாந்தம் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



142 மில். பெறுமதியான

## கொக்கேய்னுடன் பெண் கைது

கொழும்பு, டிசெ. 30

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 142 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கேய்ன் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கானாவிலிருந்து தென்னாபிரிக்கா கடவுச்சீட்டுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்டார் எயார்வைஸ் விமானத்தில் வந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## அரியநேத்திரனிடம் விசாரணைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 30

தேர்தல் ஒழுங்குச் சட்டத்தின் விதிகளின்படி, தேர்தல் செலவின அறிக்கையை முறையாக சமர்ப்பிக்காத மூன்று ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களை நியமித்த கட்சியின் செயலாளர்கள் உட்பட 10 பேருக்கு எதிராக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினர் இதுதொடர்பான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

அதன்படி, பாக்கியசெல்வம் அரியநேத்திரன், பத்தரமுல்லை சீலரத்ன தேரர் மற்றும் சரத் கீர்த்திரத்தன முதலான ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## மாட்டைக் கொன்ற மின்சாரத் தூண் மாநகரசபைக்குச் சொந்தமானதல்ல

எமது வட்டாரத்தில் கடந்த 17.12.2024 இரவன்று பசு ஒன்று மின் தாக்கி இறந்தமை பற்றி, உதயன் பத்திரிகையில் 'புதினம் தெரியுமோ?' பகுதியில் தெரிவிக்கப்பட்ட தகவல் தொடர்பில் எமது கருத்தை பதிவுசெய்யவேண்டிய தேவை எமக்குண்டு.

அந்த மின் தூண் மற்றும் மின் இணைப்பானது எவ்வேளையிலும் யாழ்.மாநகரசபைக்கு சொந்தமானது இல்லை. அந்த வீதியானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானது.மற்றும் அந்த மின் இணைப்பானது இலங்கை மின்சாரசபைக்குச் சொந்தமானது. குறித்த பகுதியில் அது மாநகரசபைக்குச் சொந்தமானது என்று பிரசுரமாகியுள்ளது. எனவே இந்த உண்மைத்தகவலை வெளிப்படுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ப.தர்சானந்த்
(முன்னாள் உறுப்பினர், யாழ் மாநகரசபை 02 ஆம் வட்டாரம்)




வழக்குகள் வீட்டுக்கட்சியைத் தேடி வருகுதா இல்லாட்டி வீட்டுக்கட்சி வழக்குகளைத் தேடிப்போகுதா எண்டு ஒரே குழப்பமாக் கிடக்குது. முந்தநாள் மத்தியகுழுவில அந்தக் கட்சி நடந்துகொண்ட விதத்தைப் பாக்கேக்க, ஆரெல்லாம் இன்னும் வழக்குப் போடாமல் இருக்கிறீங்களோ அவையெல்லாம் ஓடிவந்து வழக்கைப் போடுங்கோ எண்டு கூவிக் கூவி கூப்புடுற மாதிரித்தான் கிடந்தது. மாவையரின்ர தலைமைக்கு ஆப்பு வைக்கிறதுக்கு எண்டுதான் இந்தக் கூட்டமே கூடினது. ஆனால் காலில ஏலாது எண்டு சொல்லி அவர் கூட்டத்துக்குப் போகாததால, மற்றப் பகுதிக்கு இன்னும் வசதியாப் போட்டுது. பெரும் சில் லெடுப்போடதான் கூட்டம் துவங்குமெண்டு பார்த்தால், எல்லாரும் துள்ளாமல், துடிக்காமல் சாந்த சொரூபியளா மீற்றிங்கை தொடங்கிட்டினம். ஆனாலும் இந்தமுறை கடும் அலேர்ட்டா தாங்கள் பிடுங்குப்படுறதை மீடியாக்காரர் பாக்கக் கூடாது எண்டதுக்காக கூட்ட மண்டபத்தின்ர எல்லாக் கேர்ட்டீனையும் இழுத்து மூடிப்போட்டுத்தான் கதைக்கத் தொடங்கினவை.

மாவையர் வராததால அவருக்கு சப்போர்ட் பண்ணவும் பெரிசா ஆக்களில்லையாம். கிளிநொச்சி வாத்தியாரும், முல்லைத்தீவு டாக்குத்தரும் தான் கொஞ்சநேரம் அவருக்காகக் கதைச்சிருக்கினம். ஆனால் மற்றப்பக்கம் எல்லாருமாச் சேர்ந்து ஆட்லெறி அடிக்கேக்க, இவையள் பங்கருக்குள்ளதானே போக ஏலும்? அதால மாவையரைப் பேய்க்காட்டுறதுக்காக "அவர் அரசியல் குழுவுக்குத் தலைவராக இருக்கட்டும், கட்சிக்கு சி.வி.கே. பதில் தலைவரா இருக்கட்டும்" எண்டு பொதுவா ஒரு முடிவை எடுத்திருக்கு. ஆனால் மாவையர் தான் தான் இப்பவும் தலைவர் எண்டு சில காரணங்களைப் போட்டு அனுப்பின கடிதத்தை பதில் செயலாளர் கவனத்திலயே எடுக்கேலையாம்.

மற்றவையும் அதைப்பற்றி கிண்டிக்கிளறேலை. என்னதான் 'அரசியல் குழுத்தலைவர்' எண்டு சின்னப்பிள்ளையளைப் பேய்க்காட்டுறமாதிரிமாவையரை மத்தியகுழுக்காரர் பேய்க்காட்டினாலும், அவர் எப்பிடியும் தன்ர பதவியைப் பறிச்சது பிழை எண்டு சொல்லி வழக்குப் போடத்தான் போறார் எண்டு ஒரு கதை பரவலா அடிபடுகுது. அதுக்காகத்தான் முதலே தானே தலைவர் எண்டு கடிதம் அனுப்பினவராம். இனி அதை வைச்சு அவர் வழக்குப் போட்டால் அது முடிய நாலைஞ்சு வருசம் எடுக்கும்.

அதைவிட இப்ப கொஞ்சநாளா கட்சியின்ர சட்டம்பி அணிக்கு எதிரா போர்க்கொடி தூக்கின முல்லைத்தீவு டாக்குத்தரையும் சொல்லாமல் கொள்ளாமல் இடைநிறுத்தி இருக்கினம். அந்தாள் இப்பதான் கட்சியின்ர மத்தியகுழுவுக்கு எதிரா வழக்குப் போட்டது. அதுக்குப் பழி வாங்கத்தான் இப்பிடி அவை இடைநிறுத்தினவையாம். ஆனால் சிக்கல் என்னெண்டால் இப்பிடி மத்தியகுழு உறுப்பினரை ஒரு விசாரணையும் இல்லாமல், விளக்கமும் கேக்காமல் இடைநிறுத்த ஏலாது. அதுக்கும் டாக்குத்தர் இன்னொரு வழக்குப் போடக்கூடும்.

கடைசியா, இந்தமுறை வீட்டுக்கட்சியில இருந்து பிரிஞ்சு வேற கட்சியளிலையும், சுயேச்சையளிலையும் எலக்சன் கேட்ட ஆக்களையும் ஒரு விளக்கமும் கேக்காமல் நிப்பாட்டி இருக்கினமாம். ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில வீட்டுக்கட்சிக்கு எதிரா வண்டில் சின்னத்தில எலக்சன் கேட்ட ஆக்களை கட்சியை விட்டு விலத்துங்கோ எண்டு கிளிநொச்சி மாவட்டக்கிளை முடிவு எடுத்து ஒண்டரை வருசத் துக்கு முதல் எழுத்தில் அனுப்பின தீர்மானத்துக்கு இன்னும் பதில் குடுக்காத கட்சி, இதுக்கு மட்டும் தன்ர பாட்டில ஆக்களை நிப்பாட்டி வண்டில் விட்டிருக்கினம் கண்டியளோ. அதால இனிமேல் வண்டில்கணக்கில வழக்குகள் வீட்டுக்கட்சி யின்ர கதவைத் தட்டப்போறது உறுதி.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மேஷராசி அன்பர்களே! இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** ரிஷபராசி அன்பர்களே! உற்சாகமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்களின் புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** கடகராசி அன்பர்களே! தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்:** துலாராசி அன்பர்களே! புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர் களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவும் ஏற்படும்.

**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! உற்சாகமான நாளாக அமையும். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம்.

**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரைவதுடன் கடனும் வாங்க நேரிடும்.

**மகரம்:** மகரராசி அன்பர்களே! எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மீனராசி அன்பர்களே! புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

## சைவ, இளஞ்சைவப் புலவர் தேர்வுகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.30
இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப் புலவர் பட்டத் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி சைவப்புலவர் பட்டத் தேர்வில் ற.கீர்த்திகா, இ.இராமன், திருமதி மனோன்மணி தட்சணாமூர்த்தி ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வில் ச.சுலெக்ஷி,தெ.செல்வநாயகி, சௌ.சதுஜா, செ.வதனி, ம.டினுசா, சா.கந்தசாமி, ம.விபகரணி, ச.டக்சலா, ர. அபிராமி, க. சதுர்ஷனா, தே.ஜெருஷன் , ப.விஷாந்தினி, தி. ஜெகநாதன், த.யதுசிகா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர் என இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ரி-25)





## டெங்கு ஒழிப்பு !

யாழ்ப்பாணம், டிசெ.30
வலி. வடக்குப் பிரதேசசபையின் அனுசரணையோடு கருகம்பனை பொது அமைப்புகளும் விதை அனைத்தும் விருட்சமே செயற்றிட்டமும் இணைந்து நடத்திய டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கருகம்பனையில் இடம்பெற்றது.

இதில் கிராம அலுவலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராமத்தவர்கள், இளைஞர்கள், பிரதேசசபை ஊழியர்கள், விதை அனைத்தும் விருட்சமே செயற்றிட்ட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-22,27)

## கலைமுகம் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 30
திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் 'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழின் 78 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், பத்தி உட்பட பல்வேறு விடயங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. (ச-10)



## உணவகங்களில் திடீர்ச்சோதனை!

யாழ்ப்பாணம், டிசெ.30
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகர்ப் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினரால் கடந்த வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது 18 உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய நான்கு உணவு கையாளும் நிலையங்கள் கண்டறியப்பட்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-22,100)

## சிவதமிழ்ச்செல்வி நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.30
பெருந்தலைவர் சிவதமிழ்ச்செல்வி அன்னையின் 100 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் 7ஆம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன்போது சிறப்பு நூல் வெளியீடும், சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளன. (ச-33)

## ஊடகத்துறை அச்சுறுத்தல் உடன் நிறுத்தப்படவேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 30
கிளிநொச்சி சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள யாழ்.வடமராட்சி ஊடக இல்லம், தமிழ் ஊடகத்துறை மீது முடிவின்றித் தொடரும் அச்சுறுத்தலை தடுத்து நிறுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. ஊடகத்துறை மீது காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் தொடரும் அச்சுறுத்தல் நிலையை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும்.

அத்துடன் இத்தகைய வன்முறையில் ஈடுபடுவோரை பாரபட்சமின்றி சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உப்புள்ள நாடும் உப்பில்லாப் பொருளாதாரமும்

நாட்டில் வளங்கள் கொட்டிக்கிடந்தாலும், அதைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் 'எல்லாப் பொருள்களையும் இறக்குமதி செய்துதான் வாழ்வோம்' என்றொரு பொருளாதாரக் கொள்கை இருக்குமானால், எப்படி இலங்கை உருப்படும்? அதனால்தான் சகல வளங்கள் இருந்தும், இன்னமும் பிறநாடுகளிடமும், சர்வதேச நாணய நிதியத்திடமும் கையேந்திப் பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறோம். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்த நாட்டில் மீன்வளம் தாராளமாக இருந்தும், மாலைதீவில் இருந்தும், சீனாவிடம் இருந்தும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்கிறோம். அதைக்கூட, எங்கள் கரைகளில் இப்போது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியளவுக்கு மீன்கள் பிடிபடுவதில்லை என்று ஏதோ ஒரு சாக்குப் போக்குச்சொல்லித் தப்பிக்கொள்ளலாம். ஆனால் உப்பைக் கூட பிறநாடுகளிடம் இருந்து இறக்குமதி செய்துதான் இலங்கையர்கள் வாழவேண்டும் என்ற நிலையை எப்படி மன்னிப்பது? ஒவ்வொரு வருடமும் சராசரியாக இருபது லட்சம் மெற்றிக் தொன் உப்பு இலங்கைக்குத் தேவை. ஆனால் அந்த உப்புத் தேவையில் வெறும் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மெற் றிக்தொன்னே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதி 18 லட்சம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உப்பை பிறநாடுகளிடமிருந்தே இலங்கை கொள்வனவு செய்துகொண்டிருக்கிறது என்ற தகவல் கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருக்கிறது.

இலங்கையில் பல இடங்களில் உப்பளங்கள் இருந்தாலும் ஆனையிறவு, புத்தளம் உப்பளங்கள் அதிகம் பிரசித்தமானவை. அதிகளவு உப்பை உற்பத்தி செய்யும் திறனும் கொண்டவை. குறிப்பாக ஆனையிறவு குறிஞ்சாத்தீவில் மாரிகாலத்தை தவிர்ந்த ஏனைய 8 மாதங்களில் எவ்வளவு உப்பையும் உற்பத்தி செய்யக் கூடிய நிலவளமும், காலநிலையும் வாய்த்திருக்கின்றன. ஆனால் அதன் கொள்ளளவை விடவும் மிகக்குறைந்த அளவிலான உப்பே அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. மாறாக ஆளணி வளத்தை அதிகரித்து, அங்கு உப்பு உற்பத்தியையும் இன்னும் பரந்த அளவில் மேற் கொண்டால் படிப்படியாக இலங்கையின் உப்புத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய தனியொரு உப்பளமாகும் திறனும் இதற்குண்டு. போர்க் காலங்களில் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஆனையிறவுப் படைத்தளத்தை அண்டியதாக இந்த உப்பளம் இருந்ததால், அடிக்கடி இதன் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதனால் அங்கு போதிய உற்பத்தி நடக்கவில்லை என்று சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் போர்முடிந்து 15 வருடங்களாகியும் இன்னமும் போர்க்காலத்தில் உற்பத்திசெய்யப்பட்ட அதேயளவு உப்பே ஆனையிறவில் விளைவிக்கப்படுவது பொருளாதார வளர்ச்சிக்கு பாதகமான அறிகுறியே.

ஆனையிறவு உப்பளம் நவீனமுறையில் விரிவாக்கம் செய்யப்படாமைக்கு மிகமுக்கியமான காரணம், அது தமிழர்களின் பகுதியில் இருப்பதே. அந்த உப்பளத்தை விரிவாக்கினால் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். பெரும் பணம் வடக்குக்கு வரும். உப்பளத்தை அண்டிய பகுதிகள் செழிப்படையும். பொருளாதாரம் பலமடையும். ஆனால் இனரீதியாக இந்த நாட்டின் எல்லாக்கூறுகளையும் பார்க்கும் கடந்தகால ஆட்சியாளர்கள், ஆனையிறவு உப்பளத்தை பணம் கொழிக்கும் உற்பத்தி நிலையமாக மாற்றினால் தமிழர்கள் வளம் பெற்று விடு வார்கள் என்ற வறட்டுச் சிந்தனையால் அதனை விரி வாக்கம் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எப்படி தமிழர் பகுதியில் இருப் பதால் பலாலி விமான நிலையம் இன்னமும் மாட்டுக் கொட்டகை போல வசதி வாய்ப்பு களற்று, ஓடுபாதையின் நீளமின்மையால் சர்வதேசவிமானங்கள் வந்து தரையிறங்கமுடியாததாக இருக்கின்றதோ அதேபோன்றே ஆனையிறவு உப்பளமும் பெரிதா கக் கவனிப்பற்றே இருக்கின்றது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதியில் ஆனையிறவு உப்பளத்தையும் முழுமையாக இயங்க வைப்பதாக தெரிவித்திருந்தது. அதனை நடைமுறைப்படுத்தினால் உப்புக்கேனும் பிறநாடுகளிடம் கையேந்தாத நிலையை நாட்டில் உண்டாக்கலாம். உப்பில்லாப் பண்டம் மட்டுமல்ல உப்பில்லா நாடும் குப்பையிலேதான்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



நாளொரு நல்வார்த்தை

வெற்றிக்குத் திட்டமிடாதவர்கள் தானாகவே தோல்விக்கு திட்டம்போட்டு விடுகிறார்கள்.

– சாமுவேல் ஜோன்சன்




# வர்த்தகத் தொடர்பு பேண இலவச விசா வழங்குக!

## இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 30**

**இந்தியா செல்லும் இலங்கைப் பிரஜைகளுக்கு இலவச விசாவை வழங்குமாறு இந்திய அரசாங்கத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளை மேலும் விரிவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இது ஏதுவாக அமையும் என்று வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, சவுதிஅரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென்கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகளுக்கு இலவச விசா வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே இலங்கைப் பிரஜைகளுக்கும் இலவச விசா வழங்குவது குறித்து அவதானம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இந்தக் கோரிக்கை தொடர்பில் இந்தியா ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சீதுவவில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

கொழும்பு, டிசெ. 30

சீதுவ வெலிபொட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மூவரில் ஒருவர் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் காயமடைந்து நீர்கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். காரில் வந்த சிலர் துப்பாக்கிச் சூடு நடத்திய நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## 383 சாரதிகள் கைது!

கொழும்பு, டிசெ. 30

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 383 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுவரும் சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


## இந்தோனேஷியக் கப்பல் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, டிசெ. 30

இந்தோனேஷிய கடற்படைக்குச் சொந்தமான 'க்ரி சுல்தான் ஸ்கந்தர் முடா 367' என்ற கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

120 பணியாளர்களைக் கொண்ட இந்தக் கப்பல் 9071 மீற்றர் நீளமுடையதாகும். இதன் கட்டளை அதிகாரியாகக் கப்டன் அனுகேரா அன்னுறுல்லா செயற்படுகின்றார்.

இந்தக் கப்பல் நாட்டிலிருக்கும் காலத்தில் நாட்டின் பிரதான இடங்களுக்கு செல்லவுள்ளதோடு இன்று திங்கட்கிழமை நாட்டிலிருந்து மீளவும் புறப்படவுள்ளது. (ச-இ)




## ரின் மீன்களுக்கு விலை நிர்ணயம்

பல்வேறு ரின் மீன்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோனால் இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய 425 கிராம் எடையுள்ள டுனா ரக ரின் மீன் 380 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் 155 கிராம் மெகரல் ரின் மீன் விலை 180 ரூபாவாகவும் ஜெக் மெகரல் 425 கிராம் ரின் மீன் 560 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - மார்கழி - 16
31.12.2024
சுபநேரம் : 10.59 - 12.29
ராகுகாலம் : 03.29 - 04.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி ஓடுபாதையை விஸ்தரித்தால் பிறநாடுகளுக்கு விமானசேவை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.29**

**பலாலி சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவுபடுத்தப்பட்டால் ஏனைய நாடுகளுக்கும் விமானசேவையை விஸ்தரித்து சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேத நாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணசபையில் சுற்றுலாப் பணியகத்தினால் வெளியீடு செய்துவைக்கப்பட்ட வடமாகாணத்தின் சுற்றுலாசார் மேம்பாட்டு காணொலி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த பல காலங்களாக நாட்டின் நிலைமை காரணமாக சுற்றுலாத் துறை மிக மோசமாக வீழ்ச்சிய டைந்திருந்தது. தொழிற்றுறைகளில் நாம் பலவற்றை இழந்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தோம். சுற்றுலாத்துறையை நாம் மேம்படுத்த வேண்டும் என்றால் போக்குவரத்துதுறையை மேம்படுத்தவேண்டும். இப்பொழுது பலாலிவிமான நிலையத்தினூடாக மட்டுப்படுத்தப்பட்ட விமானசேவைகள் மாத்திரமே நடக்கின்றன.

பலாலி விமானநிலையத்தின் ஓடுபாதை விரிவுபடுத்தப்படுகின்ற போது ஏனைய நாடுகளுக்கும் விமான சேவைகளை முன்னெடுக்கக்கூடிய சூழல் உருவாகும். வடக்கில் தீவகங்கள் உள்ளிட்ட பல சுற்றுலா சார் இடங்கள் காணப்படுகின்றன. சுற்றுலாத்துறை மேம்பாடு அடைய நாம் அனைவரும் ஒன்றித்துப் பயணிக்கவேண்டும் - என்றார். (ச-125)

# மாற்றுவலுவுடையோரின் காணியை ஒப்படைக்குக

## கிளிநொச்சி அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, டிசெ. 30


கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் மாற்றுவலுவுடையோர் சங்கத்துக்கென ஒதுக்கப்பட்ட 17 அரை ஏக்கர் காணியை அவர்களிடமே வழங்க வேண்டும் என கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு மாவட்ட செயலாளர் ஜயாத்துரையால் ஆனைவிழுந்தான் பகுதியில் 17 அரை ஏக்கர் காணி மாற்றுவலுவுடையோர் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

இந்தநிலையில் 2009ஆம் ஆண்டு யாழ்.திருக்கன்னியர்மடம் குறித்த காணியை பொறுப்பெடுத்து அங்கே தற்போது வருமான நோக்கில் பயிர்செய்து நன்மைகளைப் பெறுகின்றனர். இதனால் மாற்றுவலுவுடையோர் காணியை இழந்துள்ளனர். எனவே சுவீகரிக்கப்பட்ட எமது காணியை விடுவிக்கவேண்டும் என மாற்றுவலுவுடையோர் சங்கத்தின் பிரதிநிதி ஜெயலட்சுமி குழுக்கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார் .

இதன்போது கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், காணி மாற்றுவலுவுடையோர் சங்கத்துக்கென ஆனை விழுந்தானில் ஒதுக்கப்பட்ட 17 அரை ஏக்கர் காணியும் மாற்றுவலுவுடையோர் சங்கத்துக்கு வழங்கப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். (ச-125)





# இளங்குமரன் எம்.பி.

## வர்த்தகர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கும் சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் மற்றும் சிவில் சமூகச்செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு சாவகச்சேரியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது வர்த்தகர்கள், பொதுமக்களின் கோரிக்கையை மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவரும் அமைச்சருமான சந்திரசேகர் ஊடாக உரிய திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தி மக்கள் நலன் சார்ந்த முறையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று இளங்குமரன் எம்.பி. குறிப்பிட்டார். (ச-22,27)

# பீடைத்தாக்கத்தைக் கட்டுப்படுத்த மண்ணெண்ணெய் விசிறாதீர்!

## யாழ்.மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 30

நெற்செய்கையில் ஏற்படும் கபில தாவரத்தத்தி, வெண்முதுகுத் தாவரத்தத்தி மற்றும் சந்துகுத்தி ஆகியவற்றின் தாக்கங்களைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட விவசாய இரசாயனங்களை விசிற வேண்டும் என்று யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பீடைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு சில விவசாயிகள் மண்ணெண்ணையை யூரியா உரத்துடன் கலந்து தவறான முறையில் பயன்படுத்துகின்றனர்.

மண்ணெண்ணெய் பிரிந்தழியாது நிலைத்து நிற்கக் கூடியது. மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் போது பயிரின் வளர்ச்சி பாதிப்படைவதுடன் உற்பத்தி செய்யப்படும் விதைகளும் மலட்டுத்தன்மை அடைகின்றது.

அத்துடன் இது உணவுச் சங்கிலி மூலம் ஏனைய உயிரினங்களுக்கும் கடத்தப்படுகின்றது. இதனால் ஒவ்வாமை, சிறுநீரக பாதிப்பு, ஓமோன் தொழிற்பாடுகள் பாதிப்படைதல் மற்றும் மலட்டுத்தன்மை என்பன ஏற்படலாம். எனவே சூழல் நேயத்தை கடைப்பிடித்து இவ்வாறான செயற்பாடுகளை நிச்சயமாக தவிர்க்க வேண்டும் - என்றார். (ச-17)

# சந்தர்ப்பவாத அரசியலில் அரசாங்கம்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 30

சுனாமி நிவாரணங்கள் மற்றும் உதவித் திட்டங்களுக்கு மனிதாபிமானமின்றி எதிராக குரல் கொடுத்த ஜே.வி.பி. இன்று புது அவதாரம் எடுத்து ஆழிப்பேரலையின் நினைவேந்தலை மேற்கொள்கின்றது. மாற்றம் என்று சொல்லிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் ஏற்படுத்திய மாற்றம் தான் என்ன? இதனை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் எனப் பலதைப் பற்றி பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் இப்போது பேசுவதையும் செயற்பட்டு வருவதையும் உரிய முறையில் அவதானிக்கவேண்டும்.

ஜே.வி.பி.யினர் தான் தேசிய மக்கள் சக்தியாக புது அவதாரம் எடுத்து வந்திருக்கின்றனர். குறிப்பாக மாற்றம் என்று சொல்லி வந்த அவர்கள் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர் எனப் பார்க்க வேண்டும் - என்றார். (ச-20,125)

# மரக்கறி விலை உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.30

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், உள்ளூர்ச் சந்தையில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன்படி, 160 ரூபா சில்லறை விலையில் இருந்த ஒரு கிலோ கிராம் பூசணிக்காய் தற்போது 300 முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து மரக்கறிகளும் ஒரு கிலோ கிராம் 500 ரூபா முதல் 800 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# தேங்காய்த் தட்டுப்பாடு மார்ச் வரை நீடிக்கும்

யாழ்ப்பாணம், டிசெ. 30

எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் தேங்காய் விலையில் மாற்றம் இருக்காது என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.


மார்ச் மாதம் வரையில் தேங்காய் விளைச்சல் கிடைக்காது என்ற காரணத்தாலேயே இந்த நிலைமை நீடிக்கவுள்ளதாக அதன் தலைவர் சாந்த ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் அரசாங்கத்துக்குச் சொந்தமான தென்னந் தோப்புகளில் விளையும் தேங்காய்களை சதொச நிறுவனம் ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 02 • 05 • 1941



உதிர்வு 28 • 12 • 2024

## திலகவதி சோதிலிங்கம்

(முன்னாள் ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி)

யாழ். நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி சோதிலிங்கம் (முன்னாள் ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி) நேற்றுமுன்தினம் (28.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா (எழுதுமட்டுவாழ்) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோதிலிங்கம் (முன்னாள் அதிபர், யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், உப அதிபர், இரத்தமலானை இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், மணிவண்ணன் (துஷி - UK), முகுந்தன் (Australia), மதுமதி (Australia), கோகுலபாலன் (UK), வைதேகி (Sri Lanka) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகன்யா (UK), முகுந்தன் (Australia), திலீபன் (HNB) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ் சென்றவர்களான இராசபூபதி, புனிதவதி, கமலாதேவி, அருணாசலம் மற்றும் சீதாதேவி, Dr.இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மானுஜன், ஆஜன், வர்ஷனா, அபிஷேக், லஷானி, அருண் கிரிஷ், அனுஹாசினி, ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (ஆறுமுகம் வீதி, நுணாவில் மேற்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**

| | | | |
|---|---|---|---|
| மணிவண்ணன் (துஷி) | - + 4479 5649 2242 | கோகுலபாலன் | - +4477 6702 1214 |
| முகுந்தன் | - +6147 3037 334 | வைதேகி | - +9477 3644 035 |
| மதுமதி | - +61402699390 | | |

(Cr 44004) N -1)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை

## வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம்

1978ம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட இலக்கம் 41இன் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபையானது நகர அபிவிருத்திப் பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டதனடிப் படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப் பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனை யினைப் பெறும் முகமாக சபையின் தலைமைக் காரியாலயம் மற்றும் உபஅலுவலகங்கள் என்பவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் சபையின் இணையத்தளம் (valikamamnorth.ps.gov.lk) மற்றும் முகநூல் பக்கத்திலும் (Facebook-வலிவடக்கு பிரதேச சபை) மென்பிரதியாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் சபை அபிவிருத்தியில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் குறித்த அபிவிருத்தித் திட்டத்தினைப் பார்வையிட்டு எதிர்கால நிலைத்துநிற்கும் அபிவிருத்தி தொடர்பாக ஆலோசனை மற்றும் கருத்துக்களை எதிர்வரும் 2025.02.25ம் திகதிக்கு முன்னராக செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை எனும் முகவரிக்குப் பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது அலுவலக மின்னஞ்சல் ஊடாகவோ (vnpskks@yahoo.com) அனுப்பிவைக்கு மாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் எவராயினுமொருவர் தனது முழுப்பெயர்,தபால் முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை ஆவணத்தில் குறிப்பிட வேண்டுமென்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டமானது சபை ஆளுகைப் பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான முக்கிய விடயம் என்பதால் பொதுமக்கள் மற்றும் சபை அபிவிருத்தியில் அக்கறையுள்ள தரப்பினர் அதிக முன்னுரிமை வழங்கிச் செயற்படுமாறு பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**சு.சுதர்ஜன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

திகதி :2024.12.30




## டிறிபேர்க் கல்லூரிக்கு சிறந்த நூலக விருது

தேசிய நூலகம் மற்றும் ஆவணப் படுத்தல் சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலகத்துக்கான விருதை சாவகச் சேரி டிறிபேர்க் கல்லூரியின் நூலகம் தனதாக்கி யுள் ளது. தேசிய நூலகம் மற்றும் ஆவணப்ப டுத்தல் சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு வருடா வருடம் நடத்தப்ப டுகின்ற போட்டியி லேயே 2023 ஆம் ஆண்டின் சிறந்த நூலகமாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி தெரிவு செய்யப்பட் டுள்ளது. (ச-28)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 • 07 • 1944



மறைவு 29 • 12 • 2024

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கலாபூஷணம்

## நாராயணபிள்ளை யோகேந்திரநாதன்

(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்)

கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருவையாறு கிளிநொச்சியை நிரந்த வதிவிடமாகவும், வில்லுமதவடி நீர்வேலி தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் நாராயணபிள்ளை யோகேந்திரநாதன் (ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்) நேற்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், எழிலி (யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்), குறிஞ்சி (ஆசிரியர் - கிளி / மத்திய ஆரம்ப வித்தியாலயம்), மைதிலி (நிர்வாக உத்தியோகத்தர் - சிறுவர் நன்னடத்தை வடமாகாணம்), திலீபன் (Reecha organic farm) நீலாம்பரி (முகாமைத்துவ உத்தியோகத்தர் - நீர்பாசனத்திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகரன் (இத்தாலி), தவராசா (தொழிலதிபர்), கவினேசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - நல்லூர்), சுகிர்தா, கரன் (ஆசிரியர் - கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசிதா (ஆசிரியர் - இ / கலைமகள் தமிழ் வித்தியாலயம்), நிஷாங்கன் (Reecha organic farm), சுலக்ஷன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக்கழகம் - அறிவியல்நகர்), பிரவின்ராஜ் (மாணவன் - யாழ் இந்துக்கல்லூரி), கிளி / மகாவித்தியாலய மாணவர்களான மருணிஷா, கோபிதா, நேசிகா, கிரிஷன், தபோதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2024) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது தற்போதைய இல்லத்தில் (நீர்வேலி) நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**குறிப்பு : திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் [illegible] 51 / 1, திருவையாறிலிருந்து பேருந்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.**

(cs 29552) N -1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 • 08 • 1947



மறைவு 26 • 12 • 2024

## சரஸ்வதி பாலசிங்கம்

யாழ். சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி பாலசிங்கம் கடந்த 26-12-2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கேதீஸ்வரன் (சப்தமி பிறிண்டர்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), கவிதா, கீதாஞ்சலி, சங்கீதா(கனடா), விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவநந்தினி, வசந்தமலர்(பிரான்ஸ்), சிவகுமார், பாலகுமார், சற்குருராசா (கனடா), சுபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சோமசேகரம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, தங்கம்மா, செல்லத்துரை, சின்னராசா, பொன்னம்மா, கனகம்மா, மற்றும் சின்னத்துரை, இராசையா, பராசக்தி (பிரான்ஸ்), கந்தசாமி (ஜேர்மனி), ஞானசக்தி, இராஜேஸ்வரி, தவமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், யதுசன் (கனடா), யனுசிகா, சப்தமி, ஜஸ்மிதன்(பிரான்ஸ்), கல்பனா - ஸ்ரீரிகிருஸ்ணன் (லண்டன்), நிருஷா - விக்ரம்(கனடா), நிதர்சனா - தயாபரன் (சுவிஸ்), மதுசன், மயூரன், லபோஷனா, அதிஸ்ரன்(கனடா), அம்ஷா(கனடா), அனுஷா (கனடா), பிருந்தன், தர்மிஜா, கௌசிகன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், அக்ஷன்(சுவிஸ்) அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31-12-2024) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் சரவணையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, புன்னாங்கண்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 787 6544**

(cs 57079) N -1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவலைகள்...



தோற்றம் 01 . 12 . 1945

மறைவு 13 . 01 . 2021

### அமரர் சின்னத்துரை குமரவேல்

(ஓய்வுபெற்ற நூலகர் - பொது நூலகம், சுன்னாகம்,
முன்னாள் தலைவர் - ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்,
முன்னாள் விவாகப் பதிவாளர் - வலிகாமம் வடக்குப் பிரிவு)

திதி:அமாவாசை (30.12.2024)

நானிலம் போற்ற வாழ்ந்து
நற்பொதுத் தொண்டுகள் ஆற்றி
நல்வாழ்வு எம்மை வாழ வைத்து
நம்மை விட்டு அகன்று இன்று
நான்கு ஆண்டுகள் கடந்தனவே
நமதருமை அப்பாவே!


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(CS 21449) A

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 23 . 06 . 1946

மறைவு 01 . 12 . 2024

கடந்த 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை சண்முகநாதன் (சின்னத்துரை)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் (31.12.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் "பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் அன்னதான மண்டபத்திலும்" நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தையுமாகி தாயுமாகி தாயுமானவர் தானுமாகி
தன்னலம் தான் மறந்து தன்னுடல் தான் வருத்தி
சிறப்புடன் எம்மை சிகரத்தில் தான் வைத்து
தன்னுடல் தான் துறந்து தரணியில் கலந்ததேனோ
திண்ணமாய் உம் நிழலடி தாம் வணங்கி பரவுவோமே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளையார் கோவிலடி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.


தகவல்
குடும்பத்தினர்
076 144 8306, 077 023 9603

(CS 373) V-1

# மரண அறிவித்தல்

## சபாநாயகம் சிவகுமார் (சிவம்)

### (ஓய்வு பெற்ற கொமஷல் வங்கி உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்)



தோற்றம் 12.05.1959

மறைவு 29.12.2024

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் சிவகுமார் அவர்கள் நேற்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாநாயகம்-கமலாதேவி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபாபதிப்பிள்ளை-பூமாதேவி தம்பதியின் பாசமிகு மருமகனும் ராகினி அவர்களின் அன்புக் கணவரும், ரசினா, சந்திரசேகரன் (லண்டன்), சறோஜாதேவி (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம்-சங்கானை), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கஸ்தூரி (பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், மலேரியா தடை இயக்கம் கிளிநொச்சி), பிரணவன் (லண்டன்), கோகுலன் (பிரான்ஸ்), சாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன் (ஆசிரியர் பரந்தன் இந்து மகாவித்தியாலயம்), டினேஸ் (பிரான்ஸ்), விஜயராகவன் (முகாமைத்துவ உதவியாளர் யாழ் பல்கலைக்கழகம்), சிவகணா, மாதங்கி, சியாம், சினேகன், சிபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரை, ஆரணன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சிவபாலன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்) காலஞ்சென்றவர்களான சிவதேவி (லண்டன்), கருணாநிதி, மற்றும் கேமா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஶ்ரீரஞ்சினி, சாந்தினி (பிரான்ஸ்), சரோஜினி (பிரான்ஸ்), ஶ்ரீராம் (பிரான்ஸ்), பாலராம், பத்மினி (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தானும் காலஞ்சென்ற குலேன், நந்தகுமார் (பிரான்ஸ்), ரவி (பிரான்ஸ்), ரமணி (பிரான்ஸ்), அஜந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகலனும் அபிலாஸ் (லண்டன்), தனுஸ்ரிகா (ஜேர்மனி), சாருகா (ஜேர்மனி), துளசிகா (ஜேர்மனி), கஜேந்துரு, கபில் (அவுஸ்ரேலியா), துளசி, குமரன், துர்க்கா (பிரான்ஸ்), மதன், மகிந்தன், தாட்சாயினி (பிரான்ஸ்), அபிநயா, அதிகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2024) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 027 8873 (மருமகன்)
077 308 6909 (மருமகன்)

(CR 44007) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளரின் வீட்டில் தாக்குதல் சந்தேகநபர் பொலிஸால் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 30

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சைக் குழுவொன்றில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் கொழும்புதுறையில் உள்ள வீட்டுக்குச் சென்று தாக்குதல்களை நடத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இவர் அதேதினத்தில் மேலும் மூன்று வீடுகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. (ம-26)



# நுணாவில் ரொக்கர்ஸின் வர்ண இரவும் விருது வழங்கலும்

நுணாவில் ரொக்கர்ஸ் அணியின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வர்ண இரவும் விருது வழங்கும் நிகழ்வும் அணி நிர்வாகத்தினரால் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறப்பாக விளையாடிய வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் விருதுகளும் வழங்கப்பட்டன. (ச-33,28)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கனகரத்தினம் அருள்நாதன்**

மண்ணில் 27.12.1960 — விண்ணில் 12.12.2023

திதி: அமாவாசை

ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறாது எம் துயரம்
அன்பு தந்து அரவணைத்து
அகிலமதில் எமைக் காத்தீர் - இன்று
அம்பாளின் திருவடியில் நீங்கள்
அழியாத உம் நினைவுகளில் நாங்கள்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை. — குடும்பத்தினர்

(cs.57070) (N-1)

## 21ஆம் ஆண்டு நினைவுகளும் 68வது பிறந்தநாள் நினைவுகளும்



தோற்றம் 30.12.1956 — மறைவு 29.12.2003

**திருமதி முத்துக்குமாரசாமி சரோஜா**

ஆண்டுகள் 21 ஆனாலும்
என்றும் நீங்காத
நினைவுகளுடன்
உம் குடும்பத்தினர்.

## வாடகைக்கு வழங்குதல்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான இரண்டு கடைகள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. வாடகைக்கு பெற்றுக் கொள்ள விரும்புவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 2025.01.18 ஆந் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மேலதிக தகவல்களுக்கு: 077 238 0196**

தலைவர்,
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை
தெல்லிப்பளை (துர்க்கை அம்மன் கோவில் முன்பாக)

(CR 28295) V-1

## மனுஷவின் சகோதரருக்கு மறியல்


நிதி மோசடி தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை நேற்று கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

பின்லாந்து நாட்டில் தொழில் வாய்ப்பை பெற்று தருவதாக வாக்குறுதியளித்து 30 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் சந்தேக நபர் கைது செய்யப் பட்டிருந்தார். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 28.12.1940 — இறப்பு 29.12.2024



**கந்தையா கதிரவேலு**

சுதுமலையை பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேலு அவர்கள் நேற்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருணாச்சலம், பாலசுப்பிரமணியம், பொன்னம்மா, கமலவதனி, விசாலாட்சி மற்றும் மீனாட்சி, திருமலர், கிருபாநிதி, கலாவதி, சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான குணநாயகம் புவனேஸ்வரியின் அன்பு மருமகனும் குணமதியின் அன்புக் கணவனும் கஜந்தி, ஜெகாந்தன், சங்கீதா, சுரேசன், சுமிற்றா, தனதூயா, விவேதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தகுமார், தயாளினி, றமணன், வதனா, பிரகாஷ், மதிவதனன், தர்சன் ஆகியோருடைய அன்பு மாமனாரும் கேசயன், தேஜசியன், ஷோபன், சாய்ச்சரன், ஆதிரா, யதூர்சன், நயனிதா, கஜானன், சயுன், பிறீற்றா, சிறீற்றா, கர்னிகா, கிருத்திக்ஷ், மகிஷா, டியாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பகவதி வாசா
இணுவில் கிழக்கு
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2141) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 21ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 24.04.1940 — மறைவு 11.12.2024

கடந்த (11.12.2024) புதன்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது தாயார்

**அமரர் மகாலட்சுமி கணபதிப்பிள்ளை**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (31.12.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வண்ணை காமாட்சி அம்பாள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

13, அரசடி ஒழுங்கை,
வண்ணார்ப்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS57048) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தொழில்முனைவோர் விற்பனைக் கண்காட்சி!

கிளிநொச்சி, டிசெ.30

பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சி கிளிநொச்சி மாவட்டச் செயலக பெண்கள் பிரிவு மற்றும் மாவட்ட மகளிர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பரந்தன் பேருந்து நிலைய வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயனி நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கலந்துகொண்டு விற்பனைக் கண்காட்சியை திறந்து வைத்தார். (ரி-113)



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நள்ளிரவு திருப்பலி கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்புற நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். (ச-45)




## பரிசளிப்பு

முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் தேசிய வாசிப்பு மாத பரிசில் வழங்கும் நிகழ்வும் விசுவமடு மத்திய சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தின் தலைவர் சஜீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், கலந்து கொண்டார். (ச-25,113)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 216 குடும்பங்களுக்கு 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் புலம்பெயர் தேசத்து உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வழங்கிவைக்கப்பட்டது. அதன் ஓர் அங்கமாக நுணாவில் மேற்கு பகுதில் 55 குடும்பங்களுக்கு அண்மையில் உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப் பட்டன. (ச-28)




சமாதான நல்லிணக்கத்தை நோக்கிய, இமாலய பிரகடனத்தின் யாழ்ப்பாணம் மகாநாடு, யாழ். தந்தை செல்வா அரங்கில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மதகுருமார்கள், அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், சமூகமட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25,159)




குத்துச்சண்டைப் போட்டி

## வவுனியா மாணவன் தேசிய மட்டத்தில் சாதனை

வவுனியா, டிசெ. 30

தேசிய மட்ட இளையோருக்கான குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் ரி.தரணிதரன் வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார். இவருக்கான முழுமையான பயிற்சியினை குத்துச்சண்டையின் வடமாகாண தலைமைப் பயிற்றுவிப்பாளர் எம்.நிக்சன் வழங்கியிருந்தார். (ச-25,110)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1939



மறைவு 29 . 12 . 2024

### இராமலிங்கம் அமிர்தலிங்கம்

செட்டிக் குறிச்சி பண்டைத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி பேரம்பலம் அவெனியூவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்- நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும் சுசிகரன். சுசீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யாமினியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம். கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான யுகவதி. இராஜேஸ்வரி. பரம்சோதிநாதன். சர்வேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி. மங்கையக்கரசி. சின்னம்மா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சண்முகரட்ணம். பாலேந்திரன். சோமசேகரம் மற்றும் உமாதேவி. விஜயசுந்தரம். ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2024) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் சங்குவேலி பேரம்பலம் அவெனியூவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன்-077 399 7672

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறையற்ற...

நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த அண்மைய தேசிய கணக்காய்வறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பல முக்கியமான நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள தாமதங்கள், திறனின்மை மற்றும் தவறான முகாமை காரணமாக அரசாங்கத்துக்கு சுமார் 1.44 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 38 நகர்ப்புற மற்றும் கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் பொது, உள்நாட்டு பாடசாலை சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றை செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

அந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட கால அளவிலிருந்து ஏழுமடங்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கட்டுமானத்துறையில் ஒப்பந்ததாரர்களை முன்னகர்த்திச் செல்வதற்கு அரசாங்கத்தால் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், 330 முதல் 2 ஆயிரத்து 158 நாட்கள் வரையிலான தாமதங்கள் ஏற்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம-6)

## வடக்கில்...

கும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிவிப்பில் மேலும் உள்ளதாவது:-

நாளை (இன்று) முதல் அடுத்த சில நாள்களுக்கு வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழையுடனான வானிலை ஓரளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 50 மில்லிமீற்ற ருக்கும் அதிக மான கனமழையை எதிர்பார்க்கலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம-26)

## முப்படைகளையும்...

தெரிவித்துள்ளார். திருகோணமலையில் இடம்பெற்ற, புதிதாக கடற்படை பயிற்சியை முடித்த கடற்படைச் சிப்பாய் களின் அணிவகுப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாயிற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் இராணுவ தேவைகளுக்கு மட்டுமே முப்படையினர் பயன்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-6)

## மினிபஸ்...

அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தனியார் பேருந்து மேற்படி வழித்தடத்தில் சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பாக சமூக ஊடகங்களில் வீடியோக்கள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அறிவுறுத்தியிருந்தார். இதையடுத்தே, குறித்த தனியார் பேருந்து உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

## ஈழத்தின்...

கொண்ட அவர் கிளிநொச்சி திருவையாறு தபாலகத்தின் உதவித் தபால் அதிபராகப் பணியாற்றியிருந்தார். 1960களில் நிலம் புலம் சார்ந்து எழுத்தின் மூலம் ஈழ உலகை வடிவமைக்கும் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார்.

இலங்கை வானொலியில் நாடக எழுத்தாளராக பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் நாடக எழுத்தாளராகவும் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினார்.

உயிர்த்தெழுகை, உயிர் குடிக்கும் பறவைகள், சாம்பல் பறவைகள், காவல் வேலி போன்ற நாடகத் தொடர்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. கண்ணீர் மழலைகள், விடுதலை முழக்கம் உட்பட பலதொடர் நவீனங்களை எழுதிய அவர் பலநூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் படைத்துள்ளார். போர்க் காலத்தில் பல வீதி நாடகங்களையும் உருவாக்கியிருந்தார். 1993ஆம் ஆண்டில் ஈழநாதம் நாளிதழ் வன்னிப் பிராந்தியத்துக்கான பதிப்பை தொடங்கிய போது 1995ஆம் ஆண்டுவரை அதன் ஆசிரியராகவும், யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'புதுவிதி' வார இதழின் ஆசிரியப் பீடத்திலும் பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் சந்திரசேகர ஆசாத், யோக நாராயணன், விஷ்ணுபுத்திரன், அக்கினீஸ்வரன் என்ற புனைபெயர்களிலும் நா.யோகேந்திரநாதன் என்ற இயற்பெயரிலும் அரசியல் கட்டுரைகளை எழுதியுள்ளார். சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாகவும் இவர் பல்வேறு நாவல்களைப் படைத்துள்ளார். தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஆவணப்படுத்தும் பெருமுயற்சியில் அளப்பரிய பங்காற்றிய அவர் போராட்ட வரலாற்றை மையமாகக் கொண்டு நீந்திக் கடந்த நெருப்பாறு, (முள்ளிக்குளத்திலிருந்து கிளிநொச்சி வரை), நீந்திக்கடந்த நெருப்பாறு (கிளிநொச்சியிலிருந்து புதுமாத்தளன் வரை), மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல்களைப் படைத்திருந்தார். கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் ஆனையிறவை வெற்றி கொண்ட வரலாற்றை வெளிப்படுத்தும் விதமாக 39 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

தனது கனதியான படைப்புகள் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச் சேர்த்த அவர், விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரனால் கௌரவிக்கப்பட்டிருந்தார். (ம-113)

## 60....

சபை தெரிவித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட மருந்து வழங்குநரை நியமிக்காத காரணத்தாலேயே அவற்றின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-6)

## தமிழர்களின்...

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை துரிதப்படுத்துவதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. பல தசாப்தகாலமாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்படுகிறது. இருப்பினும் எந்த அரசாங்கங்களும் அதைச் செயற்படுத்தவில்லை. இதன்மூலம் முதலாளித்துவ தரப்பினர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமான அரசியல் முறைமைக்கு முடிவுக் கட்டியுள்ளது. நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள் -என்றார். (ம-இ)

## அரச....

விட்டு எமது பயணம் தொடரும் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்பதற்கு முன்னர் மக்களுக்காக வீதியில் போராட வேண்டியிருந்தது. அப்போது கடந்த அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக் காட்டினோம். லஞ்சம், ஊழல், திருட்டுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினோம். இன்று நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்றுள்ளோம். எனினும் தற்போதும் எம்மால் பல தரப்பினருடன் போராட வேண்டியுள்ளது.

சில அரச அதிகாரிகள் கடந்தகால அரசாங்கங்களின் கீழ் செய்த விடயங்களையே தொடர்ந்தும் செய்வதற்கு முற்படுகின்றனர். இந்த பழமையான கலாசாரத்துக்குப் பழகிக் கொண்டவர்களால் அதிலிருந்து விடுபட முடியாமல் உள்ளது. புதிய அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணை என்ன என்பது தொடர்பில் அவர்களுக்கு புரிதல் இல்லை.

அரச அதிகாரிகள் கடந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட விதம் தவறு என்பதனாலேயே ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு மக்கள் ஆணை கிடைத்தது. எமக்கு கிடைத்த மக்கள் ஆணையை முதலில் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான அரச அதிகாரிகள் கடந்த அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்காக இன்றும் முன்நிற்கிறார்கள். முந்தைய ஆட்சியாளர்கள் எடுத்த தீர்மானங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்காக அல்ல. அது நாட்டு மக்களின் நன்மை கருதி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி தேசிய உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே மாற்றத்தை விரும்பாத தரப்புகளும் தற்போது மாறித்தான் ஆகவேண்டும். அவர்கள் மாறுவதற்குத் தயாரில்லையெனில் அவர்களையும் மாற்றி இந்தப் பயணத்தை முன்னெடுப்போம். அந்த சவால்களை ஏற்றுக்கொள்ள அமைச்சர் என்ற வகையில் நான் தயாராகவே உள்ளேன் என்றார். (ம-இ)

## விமான...

சியோல், டிசெ. 30


தென்கொரியாவில் உள்ள முவான் விமானநிலையத்தில் விமானமொன்று தரையிறங்கும்போது தீப்பற்றி எரிந்து விபத்துக்குள்ளானதில் 179 பேர் உயிரிழந்துள்ளனர். பாங்கொக்கில் இருந்து 175 பயணிகள் மற்றும் 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 181 பேருடன் தென்கொரியாவின் உள்ள முவான் விமான நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த விமானமே, தரையிறக்கத்தின் போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வெடித்துச்சிதறி விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த 179 பேர் உயிரிழந்த நிலையில், இருவர் மட்டும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் இருவரின் உடல்நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை அறிவித்துள்ளது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தையல் மற்றும் ஆரிவேக் பயிற்சி
**வகுப்புக்கள் ஆரம்பம்**
இடம் : மானிப்பாய் நகர்
ஆரம்பம் : 05.01.2025
தொடர்புகளுக்கு:-
**077 190 7261, 077 143 2539**
(CR44003) J-1





படங்கள் - ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம் – மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

## மனதார பாராட்டுகின்றேன்

**பரமசிவன் கரிகாலன்** அகிய நான் நேற்று (29.12.2024) **ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புகையிரதத்தில் வந்தபோது எனது பணப்பையை புகையிரதத்தில் தவறவிட்டுவிட்டேன்** அதனை எனக்கு மீளக் கிடைப்பதற்கு வழிகாட்டிய **யாழ். புகையிரத நிலைய பொறுப்பதிகாரி திரு. இராஜநாயகம், காங்கேசன்துறை பொறுப்பதிகாரி திரு. குமரன்** அவர்களையும் மற்றும் பணப்பையை எடுத்துக்கொடுத்த புகையிரதநிலைய **உத்தியோகத்தர்களுக்கும்** எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் **நற்செயலை மனதார பாராட்டுகின்றேன்.**

பரமசிவன் கரிகாலன்

Best Wishes

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு, மேட்டுநிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

(CS2101) P-1

**குரு :- 076 069 1105, 076 298 1105**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்!

கடந்த 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த

**எங்கள் குடும்பத் தலைவர்**

**அமரர்**
### அன்னலிங்கம் செந்தில்குமரேசன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 30.12.2024 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**குடும்பத்தினர்**
**தாவடி மானிப்பாய் வீதி, தாவடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.